திரு. சி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, இறக்கும்படியான பதனீர் சில மணி நேரத்திற்குள் புளிப்பு ஏறி, கள்ளாக மாறிவிடுகிறது. கிராமங்களில் இப்படி கள்ளாக மாற்றுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. காவல் துறையினர் இப்படி மாற்றுகிறவர்களை தீவிரமான சட்டத்தின் மூலம் தண்டிக்க இயலாத நிலைமை இருந்து வருகிறது. ஆகவே, பதனீர் இறக்குவதற்கான லைசென்ஸ் கொடுக்கும் முறையை அறவே ரத்து செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் பதனீர் இறக்க வேண்டாமென்று சொல்லுகிறாரா அல்லது லைசென்ஸ் முறையை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்கிறாரா என்று தெரியவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, போதை எது எதிலே எத்தனை சதவீதம் இருக்கிறது என்பதை கணக்குப் பார்த்தால், நாம் சாப்பிடக்கூடிய அரிசி சாதத்தில்கூட 5 சதவீதம் போதை சத்து இருப்பதாகச் சொல்லப்படுவது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? பதனீர் மட்டுமல்ல, எல்லாவற்றிலும் போதைச் சத்து இருக்கிறது. ஆகவே, மதுவிலக்கை ரத்து செய்து, மீண்டும் கள்ளுக்கடைகளைத் திறப்பதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கனம் அங்கத்தினர் அவர்களுக்கு அரிசி போதையே போதும் என்று கருதுகிறேன்.

Review of laws, rules, etc.

* 53. *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state:

(*a*) whether there are proposals under consideration of the Government to undertake systematic review of existing laws, rules, procedures, etc., with a view to streamline the administration; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நிர்வாகத்தில் ஏற்படும் அவசர சந்தர்ப்பங்களுக்குத் தேவையானபோது தற்போதுள்ள சட்டங்கள், விதிகள், விதிமுறைகள் இவற்றை மறு ஆய்வுசெய்வது இயல்பான பணியாக மேற்கொள்ளப்படுகிறது. இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுபற்றிச் சிறப்பு நடவடிக்கை எடுக்கும் செயற்குறிப்பு ஒன்றும் இல்லை.

THIRU T. MARTIN: Mr. Speaker Sir, the persent Law Minister, the Hon. Thiru Madhavan, when he was an Opposition Member during the Congress regime had brought forward a private Member Bill providing for the disclosure of the wealth of the Ministers. Now the present Ministry has got ample opportunities to make that Bill into law and so may I request the Hon. Minister to state whether this Ministry has so far taken any steps

to bring forward any legislation in the form in which the Bill had been introduced by the Hon. Thiru Madhavan during the previous Congress regime?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தொடக்கக் கேள்வியில் இந்தக் கேள்வி இடம் பெறவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவர் அவர்களே, நம்முடைய பல்வேறு இலாகாக்களிலே எந்தவிதமான உத்தரவும் துரிதமாகப் போடுவதில்லை. இதையே ஆங்கிலத்தில் 'justice delayed is justice denied' என்று பழமொழியாகச் சொல்வார்கள். அதற்காக துரிதமாக உத்தரவு போட அரசாங்கம் புனராலோசனை செய்யுமா? ரெவின்யூ போர்டு இருக்கிறது, செகரடேரியட் இருக்கிறது. கலெக்டர் ஒரு உத்தரவை ரெவின்யூ போர்டுக்கு அனுப்பி, அதை அவர்கள் செகரடேரியட்டுக்கு அனுப்பி உத்தரவு கிடைப்பதில் காலதாமதம் ஆகின்றது. ரெவின்யூ போர்டில் சீனியர் ஆபீசர்ஸ் (senior officers who are trained in all departments). இருக்கிறார்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்

டாக்டர் எச். வி. ஹாண்டே: ரெவின்யூ போர்டிலே சினியர் ஐ.சி.எஸ்./ஐ.ஏ.எஸ். ஆபீசர்ஸ் இருக்கிறார்கள். செகரடேரியட்டில் ஜூனியர் ஆபீசர்ஸ் இருக்கிறார்கள். ரெவின்யூ போர்டில் சீனியர் ஆபீசர்ஸ் போட்ட உத்தரவை மாற்றி செக்ரடேரியட்டில் உள்ள ஜூனியர் ஆபீசர்ஸ் போடும் நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த முறையை மாற்றியமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் நீண்ட கேள்வியாகக் கேட்டால் வினா நேரத்திற்கு ஒதுக்கப்பட்ட நேரம் போதாது. குறுகிய கேள்வியாக இருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது தொடர்ந்து நடைபெற்று வருகிற நிர்வாக அமைப்பில் வருகிற முறையாகும். இதிலே உறுப்பினர் அவர்கள் விரும்புகின்ற சீர்திருத்தத்தைப் பற்றி அரசு கவனத்தில் கொள்ளும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கின்ற நிர்வாகச் சட்டங்களும், விதி முறைகளும் அதிகமான அளவில் இருக்கின்றன. ஒரு ஃபைலை அதிகமான அதிகாரிகள் பார்த்துவிட்ட பிறகுதான் முடிவு எடுக்கப்படுகிறது. ஆகவே, துரிதமாக முடிவு எடுப்பதற்கான வழிவகைகளில், சிம்ப்ளிஃபை செய்ய வேண்டும். அதற்காக அட்மினிஸ்ட்ரேடிவ் கமிட்டி ஒன்றை அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நிர்வாகச் சீர்திருத்தங்களை அவசரமாக செய்துவிட முடியாது. நிதானமாகச் சிந்தித்து வழி வகைகள் காண முற்பட வேண்டும்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, இன்றைய நிலைமையில் அரசியல், பொருளாதார, சமுதாய உணர்வுகள் எல்லாம் மாறியிருக்கின்றன. ஆகவே, நிர்வாகம் நன்றாகச் செயல்படுவதற்கு சட்டங்களையும் விதி முறைகளையும் மாற்றி, துரிதமான முறையில் செயல்படுவதற்கு தடையாகவுள்ள முறையை மாற்றியமைக்கவேண்டுமென்ற விருப்பம் கனம் அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறதா ?

மு.ப. 9-30 மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நிர்வாக சீர்திருத்தத்தைப் பற்றி நிதானமாக யோசித்துச் செயல்பட வேண்டுமென்று நான் முதலிலேயே சொன்னேன்.

திரு. பெ. மலைச்சாமி: அரசின் நிர்வாகத்தைச் செம்மைப் படுத்த அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் அடங்கிய குழு ஒன்றை அமைத்து அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படிப்பட்ட நிலை அதன் நிர்வாக இயந்திரத்திற்கு ஏற்படவில்லை.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, ரெவின்யூ போர்டு இருக்கிற காரணத்தினால் பல்வேறு நன்மைகள் மக்களுக்கு ஏற்பட வில்லை. ஆகவே ரெவின்யூ போர்டையே கலைத்து விடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அபிப்பிராயம். கலைப்பது என்பது வேறு. சீர்படுத்துவது என்பது வேறு. நாம் இரண்டாவது முறையைத் தான் கடைப்பிடிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

விற்பனை வரி.

*54 வினா.—திரு. ஏ. எம். ராஜா: மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

இம்மாநிலத்தில் 1966-67, 1967-68 ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட விற்பனை வரித் தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: 1966–67-ல் விற்பனை வரி மூலம் வருமானம் ரூ. 3561.55 இலட்சம். 1967-68-ல் விற்பனை வரி மூலம் வருமானம் ரூ. 4203.23 இலட்சம்.

திரு. ஏ. எம். ராஜா: விற்பனை வரி ஏய்ப்பைக் கண்டுபிடிக்க அரசு கையாண்ட முறைகள் யாவை ? அதன்மூலம் கண்டுபிடிக்கப் பட்டு, வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நான் கொடுத்திருக்கிற கணக்கைப் பார்த்தாலே தெரியும். இந்த அரசு பதவிக்கு வரு வதற்கு முந்திய ஆண்டு 35 கோடி ரூபாயாக இருந்த வருமானம் இவ்வரசு பதவிக்கு வந்த பிறகு 42 கோடி ரூபாயாக உயர்ந்திருக்